# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 201 | சனிக்கிழமை Saturday | 17.10.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


## கோவையில் பெரியார் அறிவுலக மையத்தை முதலமைச்சர் விஜய் திறந்து வைத்தார்




கோவை காந்திபுரத்தில் ரூ.300 கோடி மதிப்பில் பெரியார் அறிவுலகம் என்ற பெயரில் நூலகம் 1 லட்சத்து 98 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் 7 தளங்களுடன் பிரமாண்டமாக கட்டப்பட்டு உள்ளது. இங்கு ஒருலட்சத்துக்கும்மேற்பட்ட புத்தகங்கள் உள்ளன. மாணவ-மாணவிகள் பயன்பெறும் வகையில் அறிவியல் மையம் உள்ளது. இந்த நூலகத்தை திறந்து வைப்பதற்காக தமிழக முதல்-அமைச்சர்விஜய், சென்னையில் இருந்து காலைதனிவிமானத்தில் புறப்பட்டு கோவை விமானம்நிலையம்வந்தடைந்தார்.

தொடர்ந்து முதல்-அமைச்சர் விஜய், அவினாசி ரோடு வழியாக விழா நடைபெறும் காந்திபுரத்துக்கு 11.4 கிலோ மீட்டர்தூரம்ரோடுஷோ சென்று பொதுமக்களை சந்தித்தார். முதல்-அமைச்சர் செல்லும் வழியெங்கிலும் சாலையின் இருபுறமும் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

த.வெ.க. சார்பில் முதல்-அமைச்சரை வரவேற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தபோதிலும், பொதுமக்கள் அதிக அளவில் திரண்டு வந்து முதல்- அமைச்சரை காண காலை முதலே ஆர்வத்துடன் காத்து நின்றனர். முதல்-அமைச்சர் விஜய்யின் கார் வரும்போது மேள தாளங்களுடன், பூக்களை தூவியும், உற்சாக முழக்கங்களை எழுப்பியும் அவர்கள் வரவேற்பு அளித்தனர். அவர்களைப் பார்த்து கையசைத்தபடி மக்களின் வரவேற்பை முதல்-அமைச்சர் விஜய் ஏற்றுக்கொண்டார்.

தொடர்ந்து நூலகத்திற்கு சென்ற முதல்-அமைச்சர் விஜய்க்கு கோவை மாநகர காவல்துறை சாரில் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. காவல்துறையினரின் மரியாதையை ஏற்றுக்கொண்ட முதல்-அமைச்சர், நூலக முகப்பில்அமைக்கப்பட்டுள்ள பெரியார் சிலை மற்றும் பெரியார் அறிவுலகம் கல்வெட்டை திறந்து வைத்தார்.

இதையடுத்து பெரியார் அறிவுலகம் நூலகத்தை ரிப்பன் வெட்டி முதல்-அமைச்சர் விஜய் திறந்து வைத்தார். அதைத் தொடர்ந்து அறிவுலகத்தில் உள்ள வரவேற்பறை, அறிவியல் மையம், குழந்தைகள் நூலகம், புத்தகம் படிக்கும் பிரிவு, அறிவியல் மையம் மற்றும் டிஜிட்டல் நூலகம் ஆகியவற்றை முதல்- அமைச்சர் விஜய் பார்வையிட்டார்.

### புதிய பணிகளுக்கு அடிக்கல்

இதையடுத்து கோவை மாவட்டத்தில் முடிவுற்ற திட்டப்பணிகளைமுதல்-அமைச்சர் விஜய் இன்று திறந்து வைக்கிறார். அதோடு புதிய பணிகளுக்கும் அடிக்கல் நாட்டி 100 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார். முதல்-அமைச்சர் வருகையை முன்னிட்டு கோவையில் இன்று பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

## “திறந்து வைப்பது அல்ல; எதையும் திட்டமிட்டு உருவாக்குவதே உண்மையான பெருமை” தி.மு.க. தலைவெர் மு.க.ஸ்டாலின் பேச்சு






சென்னை:

"யார்திறந்தால்என்ன! திறந்து வைப்பதா பெருமை? எதையும் திட்டமிட்டு உருவாக்குவதுதானே உண்மையான பெருமை! தமிழ்நாட்டில் அந்தப் பெருமை ஆக்கசக்தியான திமுகவுக்கே உரியது"என்றுகோவையில் பெரியார் அறிவுலகம் திறந்து வைக்கப்படுவதை ஒட்டி திமுகதலைவர்மு.க.ஸ்டாலின்தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கையில், "பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ வழித்தடத்தைத் தொடர்ந்து நமது திராவிட மாடல் அரசின் மற்றுமொரு மாபெரும் திட்டம் இன்று மக்களின் பயன்பாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட உள்ளது. சுயமரியாதையையும் பகுத்தறிவையும் பரப்புவதையே தம் வாழ்நாள் கடமையாகக் கருதிக்கொண்டு,தமிழினத்தின் மேன்மைக்காகத் தம் இறுதிமூச்சு வரை உழைத்து ஒளிவீசிய பெரியார் பெயரிலான அறிவுலகம் கோவையில் திறக்கப்படுகிறது. மனம் மகிழ்ச்சியில் கூத்தாடுகிறது!

2024-25-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், கோவை வாழ் பொதுமக்களிடையே, குறிப்பாக இளைய தலைமுறையினரின் அறிவுத்தாகத்தை மேலும் தூண்டும் விதமாகஒருமாபெரும்நூலகம் மற்றும் அறிவியல் மையம் அமைக்கப்படும் என அறிவித்தோம்.

அதனையடுத்து, 6-11-2024 அன்று அடிக்கல் நாட்டி, கோவை மத்தியச் சிறைச்சாலைக்குச் சொந்தமான இடத்தில், 1.98 இலட்சம் சதுர அடிப் பரப்பளவில் தரை மற்றும் ஏழு தளங்களுடன் சுமார் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இதனைக் கட்டி முடித்தோம். இப்படி நாம் விரைந்து செயல்பட்டு, அக்கறையோடு உருவாக்கியுள்ள அறிவுக் கோயில்தான் பெரியார் அறிவுலகம்.

தரைத்தத்தில் கலையரங்கம், மாற்றுத்திறனாளிகளுக்கான நூலகம் மற்றும் விண்வெளிப் பயணத் தூக்கி, முதல் தளத்தில் வரவேற்பறை, அறிவியல் மையம், இரண்டாம் தளத்தில் குழந்தைகளுக்கான நூலகம்மற்றும்சொந்தப் புத்தகம் படிக்கும் பிரிவு, மூன்றாம் தளத்தில் போட்டித் தேர்வுகளுக்கான நூலகம் மற்றும் தலைமை நூலகர் அலுவலகம்,நான்காம் தளத்தில்தமிழ்ப்புத்தகப்பிரிவு மற்றும் பருவ இதழ்கள் பிரிவு, ஐந்து, ஆறாவது தளங்களில்ஆங்கில புத்தகப்பிரிவு மற்றும் இன்குபேஷன் சென்டர், ஏழாம்தளத்தில் அறிவியல் மையம் மற்றும் டிஜிட்டல் நூலகம் எனக் காண்போரின் கண்களைக் கவரும் விதத்திலும் சிந்தையைத் தூண்டும் விதத்திலும் உலகத்தரத்தில் இதனை அமைத்துள்ளோம். ஒரு லட்சத்து 25 ஆயிரம் நூல்களைக் கொண்ட, மேற்கு மண்டலத்துக்கான மாபெரும் அறிவுச்சுரங்கமாக இது திகழவுள்ளது.

இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் நான் கோவைக்குச் சென்றிருந்தபோதே, பெரும்பாலான பணிகள் முடிவுற்று இருந்தன. அப்போதே இதனைத் திறந்து வைத்திடலாம் எனப் பலரும் சொன்னபோது,

"அவசரம் வேண்டாம், முழுமையாகப் பணிகள் நிறைவடைந்த பின்னர் திறந்தால் போதுமானது" என்று சொன்னேன்.யார் திறந்தால் என்ன! திறந்து வைப்பதா பெருமை? எதையும் திட்டமிட்டு உருவாக்குவதுதானே உண்மையான பெருமை! தமிழ்நாட்டில் அந்தப் பெருமை ஆக்கசக்தியான திராவிட முன்னேற்றக் கழகத்துக்கே உரியது.

அண்ணாவின் நூற்றாண்டை முன்னிட்டு சென்னை கோட்டூர்புரத்தில் ஆசியாவிலேயே மிகப் பிரம்மாண்டமான, அழகிய நூலகத்தை கருணாநிதி உருவாக்கினார். அவரின் ஆட்சிக்காலத்துக்குப் பின்னர், அதனை அங்கிருந்து மாற்றிடவும் சீரழித்திடவும் பல முயற்சிகள் நடைபெற்றன. அனைத்தையும் தடுத்து நிறுத்தி, திராவிட மாடல் அரசு 2021-ஆம் ஆண்டு அமைந்ததும் அண்ணா நூற்றாண்டு நூலகத்துக்குப் புத்துயிரூட்டினோம். ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குச் சரணாலயமாக இன்றளவும் அது திகழ்ந்து வருகிறது.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் கல்லூரிகள்,பல்கலைக்கழகங்கள், பூங்காக்கள், நூலகங்கள், மருத்துவமனைகள், தொழிற்சாலைகள், ஐ.டி. பூங்காக்கள், மேம்பாலங்கள், தமிழர் பண்பாட்டுச்சின்னங்கள் என உருவாக்கிய நவீன தமிழ்நாட்டின்சிற்பியாம் கருணாநிதியின் நூற்றாண்டையொட்டி, மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை அமைத்துத் திறந்து வைத்தேன். சென்னை முழுவதும் முதல்வர் படைப்பகங்கள் மற்றும் நூலகங்களையும் அமைத்துத் திறந்து வைத்தேன்.

தமிழ்நாட்டின் முதல் பொது நூலகமான எழும்பூர் கன்னிமாரா நூலகத்தை மிகச் சிறப்பான முறையில் புதுப்பித்து,நவீன சிறுவர் நூலகம், அறிவியல் மையம், சொந்த நூல் படிக்கும் பிரிவு, நவீன மாநாட்டுக் கூடம் போன்ற புதிய வசதிகளையும் ஏற்படுத்தித் திறந்து வைத்தோம். மேலும், சிந்தாதிரிப்பேட்டையில் சிதிலமடைந்து இருந்த கோஷன் நூலகத்தையும் அதன் நூற்றாண்டையொட்டிப் பழமை மாறாமல் புதுப்பித்தோம். இரண்டையும், அப்போதைய துணை முதல்வர் உதயநிதி திறந்து வைத்தார்.

சென்னை, மதுரையைத் தொடர்ந்து பிற பகுதிகளிலும் மாபெரும் நூலகங்களை அமைக்க நமது திராவிட மாடல் அரசில் முடிவு செய்தோம். அப்படி, மேற்கு மண்டல மக்களுக்காகக் கோவையில் நாம் அமைத்து உள்ளதுதான் திறப்பு விழா காணுகின்ற பெரியார் அறிவுலகம்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt


## தமிழகத்தில் 25 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு



சென்னை:

தமிழகத்தில் திருவள்ளூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட 6 மாவட்டங்களில் (அக்.17) மிக கனமழையும், டெல்டா உள்ளிட்ட 25 மாவட்டங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்பு உள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழக பகுதிகளின் மேல்சுமார்3.1கிமீமுதல் 4.5 கிமீ உயரம் வரை ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. தெற்கு கடலோர ஆந்திர பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் சுமார் 1.5 கிமீ உயரம் வரை ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.

தெற்கு கடலோர ஆந்திர பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல சுழற்சியிலிருந்து வடமேற்கு வங்கக்கடல் பகுதிகள் வரை, சுமார் 1.5 கிமீ உயரம் வரை ஒரு காற்றழுத்ததாழ்வுபாதை நிலவுகிறது.

சென்னை, செங்கல்பட்டு, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தேனி, திண்டுக்கல், மதுரை, திருப்பூர்,வேலூர்,கள்ளக்குறிச்சி, ஈரோடு, தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், ராமநாதபுரம், திருச்சி,நாமக்கல், கடலூர்,கரூர்,பெரம்பலூர் மற்றும் அரியலூர், டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் நாளை (அக்.17) கனமழை பெய்யும். இதர தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும்.

18-ம் தேதி நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், கோவை,ஈரோடு,நாமக்கல், ராணிப்பேட்டை, திருவள்ளூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் கனமழையும், இதர தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

19-ம் தேதி நீலகிரி, கோவை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், ஈரோடு, நாமக்கல், திருவண்ணாமலை, திருப்பூர், மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, திருச்சி, புதுக்கோட்டை மற்றும் கரூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும், இதர தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

20-ம் தேதி நீலகிரி, கோவை, திருவள்ளூர் மற்றும் சென்னை மாவட்டங்களில் கன முதல் மிக கனமழையும், திருப்பூர்,மதுரை,ஈரோடு, நாமக்கல், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, திண்டுக்கல், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும், இதர தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

### ஈரோடு மாவட்டத்தில் ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

### மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகின் சார்பில்

# கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற மாவட்ட அளவிலான மாரத்தான் போட்டியினை கொடியசைத்து துவக்கி வைத்தார்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று (16.10.2026), மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகின் சார்பில், கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற மாவட்ட அளவிலான மாரத்தான் போட்டியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி கொடியசைத்து துவக்கி வைத்தார்.

மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகின் சார்பில், பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, மாவட்ட ஆட்சித்தலைவர் , நேற்றைய தினம் (16.10.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் எய்ட்ஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட அளவிலான மாரத்தான் போட்டியினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்த மாராத்தான் போட்டியானது மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தொடங்கி திண்டல் அரசு மேல்நிலைப்பள்ளி வரை சென்றடைந்தது.இந்தமாராத்தான் போட்டியில், பல்வேறு கல்லூரிகளை சேர்ந்த 350-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு முதல் பரிசுத்தொகையாக ரூ.10,000 மும், 2-ஆம் பரிசுத்தொகையாக ரூ.7,000 மும், 3-ஆம் பரிசுத்தொகையாக ரூ5,000 மும், ஆறுதல் பரிசுத்தொகையாக 7 நபர்களுக்குதலா ரூ.1,000 மும் வழங்கப்படும்.

இந்நிகழ்வின்போது, துணை இயக்குநர் (காசநோய்) மரு.ரமேஷ்பாபு, துணை இயக்குநர் (தொழுநோய்)மரு.ரவீந்திரன், மாவட்ட விளையாட்டு அலுவலர் திவ்யா நாகேஸ்வரி, திட்ட மேலாளர் (மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு) துரைசாமி, ரன்னர்ஸ்கிளப் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பனப்பாக்கத்தில் இடைவிடாத மிக பலத்த கனமழை!



ராணிப்பேட்டை மாவட்டம், ஓச்சேரி அடுத்த பனப்பாக்கம் பகுதியில் சுமார் அரை மணி நேரம் பெய்த கனமழையால், அப்பகுதியின் சில இடங்களில் மழைநீர் தேங்கி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவது போன்ற நிலை ஏற்பட்டது.

இதனால், அந்த வழியாக இருசக்கர வாகனங்களில் செல்லும் வாகன ஓட்டிகள் கடும் சிரமத்திற்கு உள்ளாகினர். மேலும், முதியவர்கள் மற்றும் பெண்கள் பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகள் சாலையைக் கடந்து செல்ல முடியாமல் அவதிப்படும் நிலையும் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பனப்பாக்கம் பகுதியில் மழைக்காலங்களில் மழைநீர் சீராக வெளியேறுவதற்கான முறையான வடிகால் வசதிகள் இல்லாததே இதுபோன்ற பிரச்சினைகளுக்குக் காரணம் எனப் பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக ஆய்வு மேற்கொண்டு, மழைநீர் தேங்கும் பகுதிகளைக் கண்டறிந்து உரிய வடிகால் வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்றும், எதிர்காலத்தில் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்காமல் சீராக வெளியேற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மழைக்காலங்களில் பொதுமக்களின் சிரமத்தைத் தவிர்க்க, பனப்பாக்கம் பகுதியில் மழைநீர்வடிகால்வசதிகளைச் சீரமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா? என்பதே அப்பகுதி மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.





தென்காசி மாவட்டம், தென்காசி ,தைக்கா தெருவில் உள்ள சிவா திருமண மண்டபத்தில் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம், தென்காசி கோட்டம் சார்பில் பிரதம மந்திரி சூர்ய கர் முஃப்த் பிஜிலி யோஜனா சோலார் விழிப்புணர்வு முகாமினை மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

# தமிழக மீனவர்கள் 9 பேருக்கு இரண்டாவது முறையாக காவல் நீட்டிப்பு



ராமேசுவரம்: இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள்9பேருக்கு அக்டோபர் 30-ஆம் தேதி தேதி வரையிலும் இரண்டாவது முறையாக காவல் நீட்டிப்பு செய்து அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து அக்டோபர் 3 அன்றுகடலுக்குச்சென்ற எடின் புரோகர் என்பவருக்குச் சொந்தமான விசைப் படகை எல்லை தாண்டிய குற்றச்சாட்டின் பேரில் இலங்கை கடற்படையினர் கைப்பற்றினர். படகிலிருந்த எபிஸ்டன, மத்தியா , ஜான்ஜெய்சன்,ஸ்டீவன்சன், சுபார்டன், அபிஸ்டன், மோபிஸ், அந்தோணி பிரதீப், அந்தோணி புருடஸ் ஆகிய 9 பேர் மீனவர்கள் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு கொண்டுசென்றுயாழ்ப்பாணம்மீன்வளத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பின்னர் சிறைப்பிடிக்கப்பட்ட 9 மீனவர்கள் மீது எல்லை தாண்டி மீன்பிடித்தல், தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுநீதிமன்றக் காவலில் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டனர். மீனவர்களின் காவல் (வெள்ளிக்கிழமை) நிறைவடைந்ததை தொடர்ந்து 9 மீனவர்களும் ஊர்காவல் துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி, அக்டோபர் 30-ம் தேதி வரையிலும் இரண்டாவது முறையாக காவல் நீட்டிப்பு செய்து உத்தரவிட்டார். தொடர்ந்து 9 மீனவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் சிறையில் மீண்டும் அடைக்கப்பட்டனர்.



# வாலாஜா அருகே அங்கன்வாடி மையத்தில் விஜயதசமி சிறப்பு பூஜை: புதிய குழந்தைகள் சேர்க்கை

ராணிப்பேட்டை மாவட்டம்,வாலாஜாவை அடுத்த வன்னிவேடு கிராமத்தில் இயங்கி வரும் அங்கன்வாடி மையத்தில் இன்று விஜயதசமி திருவிழாவை முன்னிட்டுச் சிறப்புப் பூஜைகளும்,புதிய குழந்தைகள் சேர்க்கை நிகழ்வும் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு அங்கன்வாடி மைய ஊழியர் கா மாட்சி தலைமை தாங்கினார். விழாவினை முன்னிட்டு, அம்மனின் திருவுருவப் படத்திற்குச் சிறப்பு மலர் அலங்காரம் செய்யப்பட்டு, மங்கள ஆரத்தியுடன் தீபாராதனைகளும் சிறப்புப் பூஜைகளும் நடத்தப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் அங்கன்வாடி மையத்தைச் சேர்ந்த 25-க்கும் மேற்பட்ட சிறு குழந்தைகளும் அவர்களின் பெற்றோர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும், விஜயதசமி நன்னாளை முன்னிட்டு அங்கன்வாடி மையத்தில் 3 புதிய குழந்தைகள் சேர்க்கை நடைபெற்றது.

சரவணன், ருத்ரகுமார் மற்றும் ருத்ரா ஆகியோரின் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை அங்கன்வாடி மையத்தில் முறைப்படி சேர்த்துத் தங்களது கற்றல் பயணத்தைத் தொடங்கி வைத்தனர்.

விழாவின் நிறைவில் கலந்து கொண்ட குழந்தைகள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டுக் கொண்டாடப்பட்டது. விஜயதசமி நாளில் நடைபெற்ற இந்நிகழ்வு வன்னிவேடு கிராம மக்களிடையே மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

# மதுரை சாத்தமங்கலம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் அப்துல்கலாம் பிறந்தநாள் முப்பெரும் விழா நடைபெற்றது



மதுரை சாத்தமங்கலம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் அப்துல்கலாம் பிறந்தநாள் முப்பெரும் விழா நடைபெற்றது.இளைஞர் எழுச்சி நாள் விழா, அக்டோபர் மாதத்தில் பிறந்த மாணவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டம் மற்றும் மரக்கன்றுகள் நடும் விழா ஆகியவை சிறப்பாக நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக வழிகாட்டி மனிதர்கள் அறக்கட்டளை நிறுவனர் மணிகண்டன் கலந்துகொண்டு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு உரையாற்றினார்.அவர்வழங்கிய மரக்கன்றை பள்ளியின் பசுமைப் படை மாணவர்க் பள்ளி வளாகத்தில் நட்டனர்.

ரோட்டரி கிளப் ஆஃப் மதுரை பிரசிடென்ஸி சார்பில் அக்டோபர் மாதத்தில் பிறந்த மாணவர்களின் பிறந்தநாளை கேக் வெட்டி பரிசுகள் வழங்கி கொண்டாடினர். தலைவர் இளவரசன், செயலாளர் சொக்கர், துணை ஆளுநர் கார்த்திகேயன், மோகன்தாஸ் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

விழாவில் மாணவர்கள் டாக்டர் அப்துல் கலாம் அவர்களைப் போன்ற வேடமணிந்து உரையாற்றினர். அக்டோபர் மாதத்தில் பிறந்த மாணவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டமும் நடைபெற்றது. விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஜோசப் ஜெயசீலன் மற்றும் ஆசிரியர்கள் செய்திருந்தனர்.

### தென்காசியில் 18 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கம் சார்பில் தர்ணா போராட்டம்



தென்காசியில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம் சார்பில் 18 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று மாலை நேர தர்ணா போராட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தின் சார்பில் விருதுநகரில் நடைபெற்ற 12ஆவது மாநில மாநாட்டு தீர்மானத்தின் அடிப்படையில் 18 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று தென்காசியில் நடைபெற்ற மாலை நேர தர்ணா போராட்டத்திற்கு தென்காசி மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தின் தலைவர் மா.மாணிக்கவாசகம் தலைமை தாங்கினார். மாவட்டத்துணைத்தலைவர் அ. முத்துக்குமார் அனைவரையும் வரவேற்று பேசினார் மாவட்ட செயலாளர் அ.கணேசன் கோரிக்கைகளை விளக்கிப் பேசினார்.

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தின் முன்னாள் மாநில துணைத்தலைவர் வெ. சண்முகசுந்தரம் துவக்க உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் தோழமை சங்கங்களின் நிர்வாகிகள் க.சுப்பிரமணியன், க.பழனி, க.கங்காதரன், பா.கோவில் பிச்சை, என். நாராயணன், எம்.மணிமேகலை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள் இந்த தர்ணா போராட்டத்தில் மாநிலத் தலைவர் இரா.இராமநாதன் நிறைவுறை ஆற்றினார்.

இந்த தர்ணா போராட்டத்தில் சங்கத்தின் நிர்வாகிகள் பேசும்போது:-

நீண்ட காலமாக கிடப்பில்இருந்தபதிவுறுஎழுத்தர்களுக்கு பணிவரன் முறை, உதவி இயக்குனர் பதவி உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை நாம் வென்றெடுத்து இருக்கிறோம்.இதரகோரிக்கைகளையும் வென்றெடுக்க நாம் அடுத்த கட்ட போராட்டங்களை மிக சக்தியாக எழுச்சியோடு நடத்த வேண்டி உள்ளது..

ஊராட்சி செயலாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போல் ஓய்வூதியம், தேர்வு நிலை, சிறப்பு நிலை, மருத்துவ காப்பீடு உள்ளிட்ட உரிமைகளையும், சலுகைகளையும் வழங்குதல், கணினி உதவியாளர்களை தட்டச்சர் நிலையில் காலமுறை ஊதியத்தில் பணி வாய்ப்பு வழங்குதல், முழு சுகாதார திட்ட ஊழியர்களை SBM(G) திட்டத்தில் ஈர்த்து கொள்ளுதல்,மக்கள் நலப் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியத்தில் நிரந்தரம் செய்தல், 10 ஆண்டுகள் பணி முடித்த ஒன்றிய பணி மேற்பார்வையாளர்களுக்கு இரண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு உதவி செயற்பொறியாளர் வீதம் பணிப்பகிர்வினை வழங்கி உதவிப்பொறியாளர் / இளநிலைப்பொறியாளர் நிலையில் பதவி உயர்வு வழங்குதல், 100 நாள் வேலை திட்டத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையில் தனி ஊழியர் கட்டமைப்பை உருவாக்குதல், ஊழியர்கள் மீது நீண்ட நாள் நிலுவையில் உள்ள குற்றச்சாட்டு குறிப்பாணைகள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு இறுதி உத்தரவு பிறப்பித்தல், பிஎம்ஏஒய் தொடர்பான விழிப்புத்துறை குற்றச்சாட்டுகளுக்கு துறைரீதியாக நடவடிக்கை மேற்கொண்டு இறுதி உத்தரவு பிறப்பித்தல், 100 நாள் வேலை திட்டத்திற்கு வழங்க வேண்டிய நிதியினை உடனடியாக விடுவித்தல், 100 நாள் வேலை திட்டத்தில் பணிபுரியும் அனைத்து நிலை ஊழியர்களுக்கும் சிபிஎஸ்இ திட்டத்திற்கான ஊழியர் பங்களிப்பு நிதியினை உடனடியாக ஒரே நேரத்தில் வழங்கி அவரவர் கணக்கில் வரவுவைத்தல்,மேல்நிலைநீர்த்தேக்க தொட்டி ஆபரேட்டர், துப்புரவு பணியாளர்,தூய்மை காவலர்களுக்கு முறையான ஊதியம் மாதந்தோறும் வழங்குவதை உறுதி செய்தல் உள்ளிட்ட 18 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்கள்

இந்த தர்ணா போராட்டத்தில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தின் மாவட்ட பொருளாளர் மு. ஜெயலட்சுமி, மாவட்டத் துணைத் தலைவர்கள் வி. சுப்புராஜ், ந. ஆறுமுகம், எம்.செல்வம் ந.காசிபாண்டி, ச.அந்தோணி ரா. செல்வம், மாவட்ட இணைச் செயலாளர்கள் வி.முனியப்பா, ரா.வெள்ளப்பாண்டி, ச.பவுன்ராஜ் மு.கனகசபாபதி, சி. ராஜேந்திரன், ஜேசுதாசன், பி.சைலேஷ், ரா.ராஜேஸ்வரி என்ற சந்திரமதி, மாவட்ட தணிக்கையாளர்கள் கே. கருப்பையா, சு.ராஜா, மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் சி.குழந்தை மணி மற்றும் நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர். முடிவில் மாநில செயற்குழு உறுப்பினர் சி. பழனி அனைவருக்கும் நன்றி கூறினார்.



தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. S. அசோக் குமார், அவர்களின் தலைமையில் மாவட்ட காவல் அதிகாரிகளுக்கான மாதாந்திர குற்ற கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் விரைந்து முடிக்கப்பட வேண்டிய வழக்குகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வழக்குகளை விரைந்து முடிக்க அறிவுரைகளை வழங்கினார். மேலும் கடந்த மாதம் மாவட்டத்தில் சிறப்பாக பணியாற்றிய காவலர்களை பாராட்டும் அவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர், துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் ஆய்வாளர்கள் மற்றும் சார்பு ஆய்வாளர்கள் கலந்து கொண்டனர்.

## சின்னப்பநாயக்கன் பாளையம் நகராட்சி துவக்கப்பள்ளியில் ஏபிஜே அப்துல் கலாமின் பிறந்தநாள் விழா



நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் சின்னப்ப நாயக்கன் பாளையம் நகராட்சி துவக்கப் பள்ளியில் தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின் சார்பில் மக்களின் ஜனாதிபதி ஏபிஜே அப்துல் கலாம் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

விழாதளிர்விடும்பாரதம் அறக்கட்டளையின் தலைவர் சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது.நகராட்சிதுவக்கப்பள்ளி பொறுப்பு தலைமை ஆசிரியை ரதிதேவி அனைவரையும் வரவேற்றார்.

துணைத் தலைவர்கள் செந்தில்குமார், வரதராஜன், மைக்ரோடெக் தமிழ்செல்வி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வரதராஜன் அவர்கள் பேசும் போது மாணவர்களாகிய தாங்கள் அப்துல் கலாம் அவர்கள் கூறியது போல கனவு கண்டு அதை நனவாக்க அனைவரும் முயற்சிக்க வேண்டும். என்றார்.

மாணவ மாணவிகளுக்கு பேச்சு பேட்டி, ஓவியப்போட்டி நடத்தப்பட்டு அவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டது.

நிகழ்வில் தன்னார்வலர் நிர்மலா, இருபால் ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் ஆசிரியை சரிதா* அனைவருக்கும் நன்றி கூறினார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை செயலாளர் பிரபு மற்றும் *பொருளாளர் சின்னையா ஆகியோர் செய்திருந்தனர்.

## கீழ வீராணம் ஊராட்சியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி தொடக்கம் ஊராட்சி மன்றத்தலைவர் அ.வீரபாண்டியன் தொடங்கி வைத்தார்



தென்காசி மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கீழ வீராணம் ஊராட்சியில், வளர்ச்சியடைந்த பாரதம் கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ், ரூ.18.60 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டன.

கீழ வீராணம் ஊராட்சியில் உள்ள பள்ளிவாசல்மெயின்தெருமற்றும் காளியம்மன் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் பொதுமக்களின் போக்குவரத்து வசதியை மேம்படுத்தும் நோக்கில் இச்சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. தொடக்க நிகழ்ச்சிக்கு வீராணம் ஊராட்சி மன்றத் தலைவர் அ. வீரபாண்டியன் தலைமை தாங்கி, சாலை அமைக்கும் பணியைத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சிவக்குமார், வட்டார வள அலுவலர் சுடலை முத்து, ஜமாத் தலைவர் காஜா மைதீன், முஸ்லிம்பள்ளித்தாளாளர் சிந்தா மதார், பள்ளி ஆலோசகர் ஆடிட்டர் அசன், ஜமாத் முன்னாள் செயலாளர் முகமது இஸ்மாயில், முன்னாள் ஜமாத் தலைவர் மிய்யா கன்னு,முன்னாள் ஜமாத் துணைத் தலைவர் காதர் மைதீன், சமூக ஆர்வலர் அமானுல்லா

வார்டு உறுப்பினர்கள் சாகுல் ஹமீது, முகமது அனிபா, முஸ்தப்பா, நடராஜன்,அடூர் வடை கடை முகமது அலி, அரசு ஒப்பந்ததாரர் சேர்மராஜ், ஊராட்சி செயலர் பாண்டியராஜ்,

அப்தூல்வகாப்கோழிப் பண்ணை செய்யது இப்ராகிம், ஜாஜகான், மைதீன், முகமது காசிம் முகமது அனிபா, அசன் மைதீன், காசி அருணாசலம், மற்றும் ஜமாத் நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## ஆலங்குளம் அருகே ஆண்டிப்பட்டி கோவில் கொடை விழாவில் தேர் ஊர்வலம் நம்ம டாக்டர் இம்மானுவேல் பங்கேற்பு



தென்காசி மாவட்டம், ஆலங்குளம்சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆண்டிப்பட்டியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ செல்வவிநாயகர், ஸ்ரீ இராமர், ஸ்ரீ தங்கம்மன், ஸ்ரீ முப்புடாதி அம்மன், ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோவில்களின் கொடை விழா 10 நாட்கள் வெகு விமரிசையாக நடைபெற்றது.

விழாவையொட்டி, நேற்று மதியம் நடைபெற்ற அன்னதான நிகழ்ச்சியையும், இரவில் நடைபெற்ற அம்மன் தேர் ஊர்வலத்தை பாரத்ஸ் கேன்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் நம்ம டாக்டர் இம்மானுவேல் தொடங்கி வைத்தார்.

விழாவில் அம்மனுக்கு பொதுமக்கள் தேங்காய், பழங்கள் படைத்தும், மாலை அணிவித்தும் பக்தியுடன் வழிபட்டனர். மேலும், திருவிழா நாட்களில் தினந்தோறும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. அம்மனுக்கு முளைப்பாரி எடுத்தல், பொங்கலிடுதல் உள்ளிட்ட பல்வேறு ஆன்மிக நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

கொடை விழாவில் கோவில் நிர்வாகிகள், நம்ம டாக்டர் இம்மானுவேல் நற்பணி மன்றத்தினர் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

## மோசமான வானிலை: முதலமைச்சர் விஜய்யின் கேரள பயணம் ரத்து



கோவை காந்திபுரத்தில் ரூ.300 கோடி மதிப்பில் பெரியார் அறிவுலகம் என்ற பெயரில் நூலகம் 1 லட்சத்து 98 ஆயிரம் சதுரடி பரப்பளவில் 7 தளங்களுடன் பிரமாண்டமாக கட்டப்பட்டு உள்ளது. இங்கு ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட புத்த கங்கள் உள்ளன. மாணவ-மாணவிகள் பயன்பெறும் வகையில் அறிவியல் மையம் உள்ளது.பெரியார் அறிவுலகத்தை முதல்-அமைச்சர் விஜய் இன்று திறந்து வைக்கமுடிவுசெய்தார். இதற்காக இன்று காலை சென்னையில் இருந்து தனி விமானத்தில் புறப்பட்டு 11 மணிக்கு கோவை விமானம் நிலையம்வந்தார்.பின்னர் அவினாசி ரோடு வழியாக விழா நடைபெறும் காந்திபுரத்துக்கு 10 கிலோ மீட்டர் தூரம் ரோடுஷோ சென்றபடி மக்களை சந்தித்தார். பின்னர், காந்திபுரத்தில் பெரியார் அறிவு உலகத்தை திறந்து வைத்தார்.

கோவையில் விழா முடிந்ததும் மதியம் 2 மணியளவில், கேரளாவிற்கு செல்ல முதல் அமைச்சர் விஜய் செல்ல திட்டமிட்டு இருந்தார். கோவை விமான நிலையத்தில் இருந்து , ஹெலிகாப்டர் மூலம் திருச்சூர் செல்லும் வகையில் விஜய்யின் பயண திட்டம் வகுக்கப்பட்டு இருந்தது. திருச்சூரில் நடைபெறும், நவராத்திரி கொலு நிகழ்ச்சியில் பங்கேற்க விஜய் திட்டமிட்டு இருந்த நிலையில், கோவையில் திடீரென கனமழை பெய்ய தொடங்கியது. இதனால், விஜய் கேரளா புறப்படுவது தாமதம் ஆனது. தொடர்ந்து இடைவிடாமல் மழை பெய்துகொண்டு இருந்ததால், ஹெலிகாப்டர் புறப்படுவதில் சிக்கல் ஏற்பட்டது.

மோசமானவானிலை கேரளாவின் திருச்சூரிலும் பரவலாக மழை பெய்து வருவதாகவும் பலத்த காற்றும் வீச வாய்ப்பு உள்ளதாக தகவல் கிடைத்தது. இதையடுத்து, விஜய்யின் பயணம் திட்டமிட்டபடி நடைபெறுமா? என்ற கேள்வி எழுந்தது. முதல் அமைச்சர் விஜய் இசட் பிளஸ் பிரிவு பாதுகாப்பில் இருப்பதால் தனி பிரிவு பாதுகாப்பு அதிகாரிகளும் ஹெலிகாப்டர் செல்ல உகந்த சூழல் இருக்கிறதா? என்று ஆய்வு செய்தனர். இந்த நிலையில், முதல் அமைச்சர் விஜய்யின் கேரள பயணம் ரத்து செய்யப்பட்டது.

கொட்டுமழையிலும் ரோடு ஷோ

இதையடுத்து, கோவையில் இருந்து தனி விமானம் மூலம் விஜய் சென்னை திரும்புவதற்கான ஏற்பாடுகளை அதிகாரிகள் மேற்கொண்டனர். கொட்டு மழையிலும் தன்னை காண வந்திருந்த மக்களை பார்த்து குடை பிடித்தபடியே விஜய் திறந்த வேனில் நின்று கை அசைத்தபடி ரோடு ஷோவாக கோவைவிமானநிலையம் செல்கிறார்.

## “கவர்ச்சி அரசியல் செய்யும் நீர்க்குமிழி அல்ல; அதிமுக மாபெரும் மக்கள் பேரியக்கம்” எடப்பாடி பழனிசாமி பெருமிதம்



சென்னை: "கவர்ச்சி அரசியல் என்பது நீர்க்குமிழியைப் போன்றது! அது எந்த நேரத்திலும் உடைந்து சிதறிவிடும்! ஆனால், கொள்கையாலும்,தியாகத்தாலும் கட்டமைக்கப்பட்ட அதிமுக, காலத்தால் அழிக்க முடியாத மாபெரும் மக்கள் பேரியக்கம் என்று அதிமுகவின் 55-வது ஆண்டு விழாவை ஒட்டி அதன் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

மேலும், தர்மம் வெல்லும்!தீயசக்திகள்வீழும்! சோதனைகள் மறையும்! சாதனைகள் தொடரும் என்றும் அவர் சூளுரைத்துள்ளார்.

அதிமுக ஆண்டு விழாவை ஒட்டி எடப்பாடி பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில், "இந்தியத்திருநாடு விடுதலை பெற்ற பிறகு, நாட்டின் பெரும்பாலான மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சி கோலோச்சிய காலகட்டத்தில், தமிழக அரசியல் வரலாற்றில் ஒரு மகத்தான அரசியல் புரட்சியை நிகழ்த்திக் காட்டியவர் அண்ணா.

மாநில உரிமைகளை உயர்த்திப் பிடித்து, சமூக நீதியை நிலைநாட்டி, சாமானிய மக்களின் நலனைக் காக்கும் நல்லரசை நிறுவிய அண்ணாவின் மறைவிற்குப் பிறகு, அவர் உருவாக்கிய இயக்கத்தைக் கபளீகரம் செய்து, அண்ணாவின் இதயக்கனியாகத் திகழ்ந்த எம்ஜிஆரை இயக்கத்தில் இருந்து வெளியேற்றியது தீய சக்தி.

அந்தத் தீய சக்தியின் பிடியில் இருந்து தமிழகத்தை மீட்டெடுக்கவும்; அண்ணாவின் லட்சியங்களை நிலைநா ட்டவும்; கோடானு கோடி மக்களின் பேராதரவோடு, 1972-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ஆம் நாள் 'அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' எனும் மாபெரும் மக்கள் பேரியக்கத்தை உருவாக்கினார் எம்ஜிஆர்.

1977-ஆம் ஆண்டு முதன்முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற அதிமுக, எம்ஜிஆரின் பொற்கால ஆட்சியில் சத்துணவுத் திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றி ஏழை, எளிய மக்களின் வாழ்வில் ஒளியேற்றியது.

எம்ஜிஆர் மறைவுக்குப் பிறகு, அதிமுகவை கட்டிக் காத்த ஜெயலலிதா, தொட்டில் குழந்தைத் திட்டம், 69 விழுக்காடு இடஒதுக்கீட்டிற்குச் சட்டப்பூர்வ பாதுகாப்பு, அம்மா உணவகம், மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் என எண்ணற்ற சாதனைகளை நிகழ்த்தி, 'அமைதி! வளம்! வளர்ச்சி' என்ற தாரக மந்திரத்தின்படி தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்றார்கள்.

தமிழகத்தின் மருத்துவக்கட்டமைப்பைவலுப்படுத்தும் வகையில், 17 புதிய மருத்துவக்கல்லூரிகளைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்தோம். மக்களின் குடிநீர்த் தேவைகளை நிறைவேற்ற ஏராளமான கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்தினோம். நீர்நிலைகளைப் பாதுகாக்கவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் வரலாற்றுச் சிறப்பு மிக்க குடிமராமத்துப் பணிகளை முன்னெடு த்தோம்.

மெட்ரோ ரயில் திட்டங்கள், சாலை விரிவாக்கப் பணிகள், உட்கட்டமைப்புமேம்பாட்டுத் திட்டங்கள் என தமிழகத்தின் வளர்ச்சிக்காக நாம் தொடங்கிய பல்வேறு திட்டங்களுக்கு, இன்றைய ஆட்சியாளர்கள் தங்களது பெயரை ஒட்டிக்கொண்டு உரிமை கொண்டாடும் அளவிற்கு, அதிமுக ஆட்சியில் மகத்தான சாதனைகளை நிகழ்த்திக் காட்டினோம்!

இத்தகைய பெருமைமிக்க சாதனைகளையும், அரை நூற்றாண்டுக்கும் மேலான தியாக வரலாற்றையும் கொண்ட நம் கட்சியை, எத்தனையோ எதிரிகளும் துரோகிகளும் அழித்துவிடத் துடித்தபோதும், என் உயிரினும் மேலான எனதருமை அதிமுக தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகளின் அசைக்க முடியாதபேராதரவோடு, அத்தனை சூழ்ச்சிகளையும் முறியடித்து அதிமுகவை மீட்டெடுத்து, கம்பீரமாக வீருநடை போடச் செய்திருக்கிறோம்!

அதற்குச் சான்றாகத்தான், 2026-ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ் நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தலில், அசாதாரணமான அரசியல் சூழலிலும்,கவர்ச்சிஅரசியலின் மாயத் தோற்றங்கள் மேலோங்கிய நிலையிலும், அவற்றையெல்லாம் கடந்து, அதிமுக கூட்டணி சுமார் ஒரு கோடியே முப்பத்தைந்து லட்சம் மக்களின் வாக்குகளைப் பெற்றதுடன், அதிமுக 47 சட்டமன்ற உறுப்பினர்களை வென்றெடுத்து,தனது அசைக்க முடியாத மக்கள் செல்வாக்கை மீண்டும் ஒருமுறை நிரூபித்திரு க்கிறது!

கவர்ச்சி அரசியல் என்பது நீர்க்குமிழியைப் போன்றது! அது எந்த நேரத்திலும் உடைந்து சிதறிவிடும்! ஆனால், கொள்கையாலும்,தியாகத்தாலும் கட்டமைக்கப்பட்ட அதிமுக, காலத்தால் அழிக்க முடியாத மாபெரும் மக்கள் பேரியக்கம்!

# ஈரோடு திண்டல் கீதாஞ்சலி பள்ளியில் மாநகராட்சி சார்பில் குப்பை தரம் பிரித்தல் மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி 500க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்பு



ஈரோடு மாநகராட்சி மண்டலம் 3, வார்டு எண் 30-க்கு உட்பட்ட திண்டல் பகுதியில் அமைந்துள்ள கீதாஞ்சலி அகில இந்திய மேல்நிலைப் பள்ளியில் மாணவ-மாணவிகளிடையே திடக்கழிவு மேலாண்மை மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மண்டலம் 3 சுகாதார ஆய்வாளர் அருண்குமார் தலைமை தாங்கினார்; அவருடன் தூய்மைப் பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் இணைந்து மாணவ-மாணவிகளுக்கு திடக்கழிவு மேலாண்மை மற்றும் குப்பைகளைத் தரம் பிரிப்பது குறித்து விரிவான விளக்கங்களை அளித்தனர். அப்போது, தமிழக அரசால் தடை செய்யப்பட்டுள்ள ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பைகள், பேக்கிங் ஷீட்டுகள், தெர்மோகோல் பொருட்கள், பிளாஸ்டிக் கப்புகள் உள்ளிட்டவற்றைத் தவிர்த்து, அதற்கு மாற்றாக பாக்கு மட்டை, துணிப் பைகள், சணல் பைகள், எவர்சில்வர் பாத்திரங்கள் போன்ற இயற்கை சார்ந்த பொருட்களைப் பயன்படுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. மேலும், வீடுகளில் உருவாகும் கழிவுகளை 'எனது குப்பை, எனது பொறுப்பு' என்ற உணர்வோடு ஈரக்கழிவு, உலர்கழிவு, சுகாதார கழிவு மற்றும் சிறப்பு கழிவுகள் என நான்கு வகைகளாக முறைப்படி தரம் பிரித்து தூய்மைப் பணியாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பள்ளியைச் சேர்ந்த சுமார் 500 மாணவ-மாணவிகள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. பள்ளி வளாகத்திற்கு நேரில் வருகை தந்து மாணவ-மாணவிகளுக்குப் பயனுள்ள வகையில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்திய ஈரோடு மாநகராட்சி நிர்வாகத்திற்கும், வருகை தந்த மாநகராட்சி அதிகாரிகளுக்கும் கீதாஞ்சலி பள்ளியின் முதல்வர் சுப்புலட்சுமி தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மருத்துவதுறை அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டத்தில், இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை மூலம் மாநில அளவில் சிறப்பாக செயல்பட்ட ஈரோடு மாவட்ட துணை இயக்குநர் மருத்துவ பணிகள் தொழுநோய் குழுவிற்கும் மற்றும் குருவரெட்டியூர் வட்டார மருத்துவ அலுவலர்களுக்கும் வழங்கப்பட்ட முதலிடங்களுக்கான கேடயங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமியிடம் (15.10.2026) காண்பித்து, வாழ்த்துப்பெற்றார்கள்.



ஈரோடு மாவட்டம், (மேற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (16.10.2026) ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டம், சித்தோடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் மாற்றுத்திறனாளி பயனாளிக்கு மானியத்துடன் கூடிய கடனுதவியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (16.10.2026) வழங்கினார்.



ஈரோடு மாவட்டம், சித்தோடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் மகளிர் சுயஉதவிக்குழுவினர்களுக்கு மானியத்துடன் கூடிய கடனுதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (16.10.2026) வழங்கினார்.

# BLOs to conduct voter reverification for over 47 lakh electors excluded in Delhi draft roll

*Among the six metro cities – Mumbai, Delhi, Kolkata, Chennai, Bengaluru, and Hyderabad – Delhi's 32.8% deletions at the draft stage were the second lowest.*



Booth-level officers (BLOs) in Delhi have been directed to carry out a re-verification of over 47 lakh voters whose names were removed from the draft electoral rolls, to ensure that no eligible voter is left out in the on-going special intensive revision (SIR) of electoral rolls, Chief Electoral Officer (CEO) Ashok Kumar said on Friday.

The draft rolls for the national capital, published on August 31, shaved off a third of voters, listing 9.75 million (97.5 lakh) names, down from 14.5 million (1.45 crore) as of the June 30 roll.

Among the six metro cities – Mumbai, Delhi, Kolkata, Chennai, Bengaluru, and Hyderabad – Delhi's 32.8% deletions at the draft stage were the second lowest.

"During the enumeration exercise, booth-level officers had visited the residences of each and every voter at least three times. But we have now directed this exercise to recheck if there was any error and to ascertain whether any voter was left out," Kumar said.

To be sure, BLOs will only visit the address listed in their records and will not roam the area looking for the voter, an official who did not wish to be identified said.

Officials said the re-verification exercise is being carried out to ensure that no eligible voter is left out. If such a voter is traced, the BLO will assist them in filling Form 6 for inclusion of their name in the electDelhi has 14,947 BLOs, 902 assistant electoral registration officers, 70 electoral registration officers, and 13 district electoral officers, in addition to the CEO's office, to address voters' concerns. Kumar said that around 25 lakh cases out of a total of 33.12 lakh, involving voters who were issued notices for non-mapping or logical discrepancies, have also been resolved.

Voters who were left out in the draft rolls can fill out Form 6 to be included in the final voter lists to be published on December 4, he said.

The BLOs have also been directed that the cases of voters with minor mistakes in details must not be rejected summarily, he added.

# ஈரோடு கோட்டை சின்னபாவடியில் அமைந்துள்ள செங்குந்தர் சமூகத்தார் கோட்டை ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோவிலில் 27ஆம் ஆண்டு நவராத்திரி திருவிழா



ஈரோடு கோட்டை சின்னபாவடியில் அமைந்துள்ள செங்குந்தர் சமூகத்தார் கோட்டை ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோவிலில் 27-ஆம் ஆண்டு நவராத்திரி திருவிழா கடந்த புரட்டாசி மாதம் 24-ஆம் நாள் (11.10.2026) ஞாயிற்றுக்கிழமை தொடங்கி ஐப்பசி மாதம் 3-ஆம் நாள் (20.10.2026) செவ்வாய்க்கிழமை வரை 10 நாட்கள் வெகுவிமரிசையாக நடைபெற்று வருகிறது. உலக அமைதிக்காகவும், நாடு செழிக்கவும், பொதுமக்கள் அனைத்து நலன்களையும் பெறவும் தினசரி மாலை 6.00 மணிக்கு சிறப்பு பூஜைகளும் வழிபாடுகளும் நடைபெற்று வரும் நிலையில், விழாவின் முக்கிய நாளான 15-ஆம் தேதி அம்மனுக்குத் தனலட்சுமி அலங்காரம் செய்யப்பட்டு, சுமார் 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 100, 200 மற்றும் 500 ரூபாய் நோட்டுகளாலான பிரம்மாண்ட அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு தீபாராதனை நடைபெற்றது; கண்கொள்ளாக் காட்சியாகப் பண நோட்டுகளால் ஜொலித்த தனலட்சுமி அலங்காரத்தில் அருள் பாலித்த அம்மனைப் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் என ஏராளமானோர் நீண்ட வரிசையில் நின்று மிகுந்த பிரம்மிப்புடன் கண்டு தரிசனம் செய்தனர்.இதனைத்தொடர்ந்து தினம்தோறும் வழங்கப்படும் அன்னதானத்தில் சிறப்பாக பால் சாதம் (குஸ்கா) மற்றும் கல்கண்டு சாதம் மற்றும் குருமா போன்ற அன்னதானத்தை சுமார் 700க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டு அன்னதானத்தை பெற்றுக் கொண்டனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.